T. 1218

ஸ்ரீ

திவ்யகவி

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

அருளிச்செய்த

# பரப்பிரம விவேகம்



சென்னை

ஸ்ரீ வைஷ்ணவ முத்திராக்ஷரசாலை

பதிப்பு.

1927

விலை அணா 1.

ஹரி: ஓம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பரப்பிரம விவேகம்

## நூன்முகம்.

நித்திய விபூதியாகிய பேரின்பவீட்டில் நித்யர் முக்தர் ஸேவிக்கும்படி வீற்றிருக்கிற ஸ்ரீமந் நாராயணன், ஆதி பஞ்சோதியுருவை அங்குவைத்து லீலாவிபூதியி லுள்ள சேதனர்களுஜ்ஜீவிக்க அர்ச்சாவதாரமா யெழுந்தருளியிருக்கிற திவ்விய தேசங்களில் சிறப்புற்றோங்கிய திருவரங்கம் பெரியகோயிலில், ஸ்ரீ உடையவருடைய திருவடிச் சம்பந்தியாய்ப் பிரபன்னகாயத்திரியைத் திருவாய்மலர்ந்தருளிய திருவரங்கத் தமுதனார் திருப்பேரனாராகிய அழகிய மணவாளதாசர் என்கின்ற திவ்யகவிப் பிள்ளைப்பெருமாளையங்காரவர்கள் நம்பெருமாள் முதலிய சில திவ்வியதேசப் பெருமான்களின்மீது தமிழ் பிரபந்தங்கள் பலசெய்தருளுங்காலத்தில், தமிழிலக்கண விலக்கியங்களை கற்று வல்ல சிறந்த புலவர்கள் பலரும் இவருடைய கவிகளில் சொன்னோக்கும் பொருணோக்கு முதலியவற்றைக் கண்டுங் கேட்டும் கொண்டாடுவதை திருஆனைகாவிலிருக்கும் ஆகமவாதிகள் கேள்விப்பட்டு, இப்படிப்பட்ட வித்வானால் நம்முடைய சம்புகேசுரச் சிவபெருமான்மீது ஒருபிரபந்தம் பாடுவித்துக் கொள்ள வேண்டுமென்னுங் கருத்துடையவர்களாய் ஒருநாள் இவருடைய திருமாளிகையில்வந்து தங்கள் கருத்தை வெளியிட அதுகேட்டருளித் திரிகரணத்தாலும் தேவதாந்தரத்தைப் பற்றறவிட்ட சுத்தஸத்துவ தொண்டக்குல ஸ்ரீ வைஷ்ணவ சிகாமணியாகிய ஐயங்காரவர்கள் புன்ன

கைகொண்டு யாம் அரங்கனைப்பாடினவாயால் மற்றொரு குரங்கனைப் பாடுவதில்லையே யெனத் திருவாய் மலர்ந்தருளக்கேட்டு, நம்முடைய பரமசிவன்மீது பாடல் பெற்றுக் கொள்ளவந்த குரங்கென்னும் சொல்லைப் பெற்றுக்கொண்டோமே யென்று மனம் பொருதவர்களாய்ச் சடக்கெனவெழுந்திருந்து எவ்வகையினாலாவது உம்முடைய வாக்கினால் எங்கள் பரமசிவத்தின்மீது ஒருபாடலாவது பெற்றுக் கொள்ளுகிறோமென்று சபதங்கூறித் தங்களிருப்பிடத்துக்குப்போய் அதற்கு வகைதேடிக் கொண்டிருந்தனர்கள்.

இப்படியிருக்கச்செய்தே கோயிலில் உதயத்தில் திருக்காப்புநீக்கி நம்பெருமாளுக்குச் செய்யும் கைங்கரியமாகிய விஸ்வரூப தெரிசனஞ் செய்விக்கப்போகிறசமயத்தில் கொண்டுபோய் அர்ச்சகர் சமர்ப்பிக்கிற பொருள்களில் வொன்றாகிய கபிலையென்கிற பசுவானது ஒருநாள் ஆனைக்காவைச் சார்ந்த ஒருபுலத்தில் மேய அதை மேற்கூறிய ஆகமவாதிகள் பிடித்து இதனால் தாங்கள் கொண்டகருத்தை யீடேற்றுவித்துக் கொள்ளலாமென நினைத்து கட்டிவைத்தனர்கள; அன்றிராத்திரி கோயில் அர்ச்சகர் முதலாயினோர் விஸ்வரூபதரிசனப் பசுவைக்காணாமல் தேடிக்கொண்டுபோகையில் ஆனைக்காவிலிருக்கக்கண்டு, ஆகமவாதியர்களைப் பசுவைக் கொடுக்கும்படி கேழ்க்க அவர்கள் உங்களுடைய பிள்ளைப் பெருமாளையங்கார் அவர்கள் வந்துகேட்டால் தருகிறோமென்று சொல்ல, அதுகேட்டு விசுவரூப தரிசனத்துக்கு ப்ராதக்காலத்தில் வேண்டுமே யென்னு மெண்ணத்தினால் அதைமறுத்து ஒன்றும் பேசாமல் ஒத்துக் கொண்டு பரபரப்புடன் சென்று ஐயங்காரவர்களிடத்தில் விண்ணப்பஞ்செய்ய அந்தப் பிரபந்த நிஷ்டானுபவராகிய வைதிக வைஷ்ணவரானவர் அதுகேட்டருளி, துஷ்கர்ம காலந்தவிர மற்றைக்காலத்தில் ருத்திரபூமியில் அடிவைப்

பதுகூடுமோ, அன்றியும் அவ்வாலயத்தில் பிரவேசிப்பது வைதிகவைஷ்ணவனுக்குத் தக்கதன்று, ஆதலால் அந்த ஆகமவாதியர்களைக் கோயிலிடத்தில் அழைத்துவாருங்கள் எனச்சொல்லினர்.

அவ்வாறே அந்த ஸ்ரீவைஷ்ணவர்களும் ஆனைக்காவில் சென்று அவர்களுக்குச்சொல்ல, எவ்வகையினாலாயினும் ஐயங்காரவர்களால் ஒருபாடல் பெற்றுக்கொள்ள எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்த அவர்களும் நம்முடையயெண்ணம் நிறைவேறுங் காலமிதுதான் என்று அதற்கொத்துக்கொண்டு, அதிக சந்தோஷத்தோடு அக்கபிலையையும் ஓட்டிக்கொண்டு ஜயவிஜயர்கள் எழுந்தருளியிருக்கும் சந்தனுமஹாராஜா மண்டபத்தில்வந்து சேர்ந்தனர்கள். ஐயங்காரவர்களும் அவ்விடத்திலெழுந்தருளிக் கபிலையை விடுவதற்கு உங்களுடைய கருத்தேது என்று கேட்டருள, அவர்கள் உம்முடையவாக்கால் சம்புகேசுரப்பெருமானாகிய எங்கள் தெய்வத்தின்மீது ஒருபாடல்பாடித்தருவீரேல் விசுவரூப தரிசனப் பசுவை நாங்கள் விடுவதற்கு யாதொராடங்கமுமில்லை என்று சொல்லினர். அவர்கள் சொன்னதற்கு யிணங்கினவரைப்போல நடித்து, நம்பெருமாளுக்கு விசுவரூப தரிசனத்திற்கு மற்றுநாள் பிராதக் காலத்தில் ஆடங்கமாகிறபடியால் அப்பசுவை விடுவீர்களாகில் உடனே யாம் பாடுகிறோமென, எங்கள் சிவபெருமான் விஷயமாக நீர்பாடுவது யதார்த்தமாகில் அப்பாட்டில் இரண்டொரு சீரைபேனு முன்னே சொல்லுவீராகில் பசுவைவிடுகிறோம் என்றுசொல்ல, ஐயங்காரவர்களும் புன்னகைகொண்டு அவ்வாறே (மங்கைபாகன்) என்று முதலிரண்டுசீரை அருளிச்செய்த மாத்திரத்தில் அப்பசுவை விட்டனர்கள். உடனே ஐயங்காரவர்களும் முன்தாம் சொன்ன சீரைதொடங்கி,

## பதினான்குசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

மங்கைபாகன்சடையில்வைத்த கங்கையார்பதத்துநீர்
வனசமேவுமுனிவனுக்கு மைந்தனான தில்லையோ
செங்கையாலிறந்தவன் கபாலமாரகற்றினார்
செய்யதாளின்மலரரன்சிரத்திலான தில்லையோ
வெங்கண்வேழமூலமென்ன வந்ததுங்கள்தேவனோ
வீறுவாணனமரிலன்று விறலழிந்ததில்லையோ
அங்கண்ஞால்முண்டபோது வெள்ளிவெற்பகன்றதோ
ஆதலானரங்கனன்றி வேறுதெய்வமில்லையே.

ஆதலால் ஜீவகோடியில் சார்ந்தவரே யொழிய உங்கள் தேவதை பரமாத்துமா அல்லர் என்று, இச்செய்யுளைச் சொல்லி உலகத்துக்குப் பல தெய்வங்களுண்டோ ஒரு தெய்வமேயாம், அத்தெய்வம் திருவரங்கனே யல்லாமல் வேறில்லையென, அதுகேட்டு அவ்வாகமவாதியர்கள் (கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டாப்போல்) இதென்ன விபரீதமாய் முடிந்ததே யென்று சினங்கொண்டு அந்த ஆகமவாதிகளுக்குள் சிறந்த நிஷ்டானுபவர்களாகிய சிலவித்துவான்கள் வேதவிருத்தமாகிய ஆகம புராணங்களைக் கொண்டு புலவர்பெருமானாகிய ஐயங்காரவர்களோடு வாது செய்யத் தொடங்கினர்கள்.

அவ்வாதிசைவ வித்துவான்கள் கேட்ட வினவுக்கு விடைசொல்லியருளிய உத்திரங்களைப் பின்னுள்ளோருந் தெரிந்து கொள்ளும்படி பரமகாருணிகராகிய ஐயங்காரவர்கள் வெள்ளைப்பாவால் கூறினர். அவை வருமாறு:

(1) எங்கள் சிவபெருமான் அக்கினிமலையாய் நின்றருளியபோது அவருடைய பாதத்தைத் திருமால் தேடினாரென்றதற்கு விடை.

## நேரிசை வெண்பா

அண்ட மளக்க வடிக்கீழொடுங்கியுல
குண்ட பொழுதுதரத் துள்ளொடுங்கித்—துண்டமதி
சூடினன் மாலருளாற் றேன்றினு னங்கவனைத்
தேடினன் மாலென்ப தென்.

(2) லோகேசுவரராகிய பரமசிவனார் திரிபுர தகனஞ் செய்து அச்சுதன் முதலிய தேவர்களைக் காத்தருளினா ரென்றும் அந்த அச்சுதனனவர் விருஷபமாய் அப்பரம சிவத்தைத் தாங்கினரென்றும் சொன்னதற்கு விடை

ஆவா யதன்கன்று யந்தரியா யிப்பொருளாய்
ஏவாய்ப் பவுத்தனுமா யெம்பெருமான்—காவாக்கால்
போரும் பொருமோ புராந்தகனென் றேபேரும்
சீரும் பெறுமோ சிவன்.

அந்த வீரனே யனுமானு கப்பிறந்து
சந்ததமும் வாகனமாய்த் தாங்கியதை--யிந்தவுல
கெல்லா மறியமாலேறானு னென்பதென்னே
கல்லா மடமாந்தர் காள்.

(3) பக்தவத்ஸலராகிய திருமால் சிவனைக்காத்தருளினா ரென்பதற்கு மேலும் ஒரெடுத்துக்காட்டு விடை

தூளாயுத தலைசுதறுச சுடடவ்டம் புன்மூளைத்து
வாளாய்ப் பெயரு மறையரதோ—தாள்வருந்த
வந்தசிவ னுக்கிரங்கி மாயவிரு காசுரனை
அந்தவரி கொல்லா விட்டால்

(4) ஸ்ரீ கைலாசபதியை ஸ்ரீபரந்தாமனனவர் தம்மு டைய கண்ணைச்சாத்திச் சக்கரத்தை பெற்றாரென்று நூல் கள் கூறுகின்றனவென்றதற்கு விடை.

சக்கரத்தை மிக்கமலர் சாத்தியுபா சித்தனால்
முக்கவட்டுச் சூல முனம்பெற்றான்—நக்கனென்று
மாமறைநூல்சொல்லவரன் மாற்ஃகதீந்தானெனலென்
தாமதநூற் பொய்யறியா தார்.

சின்முத் திரைதரித்துத் தெக்கணா மூர்த்தியென
இன்ன மரன்றியா னிந்திருக்க—முன்னமரி
போதோர்கண் ணலரனைப்பூசித்தா னென்றுரைப்ப
தேதோ சிவப்பிரானந்த ரே,

(5) சிவனார் விஷபானஞ்செய்து திருமால் முதலிய தேவர்களைக் காத்தாரென்றதற்கு விடை.

அண்டமுண்ட போதுகடலாலமுமா லத்தையுண்ட
கண்டனையுங் கூடவுண்ட காரணனை—மண்டுநஞ்சுக்
கஞ்சினதா கப்பகர்வீ ராகமத்தை நம்பிநம்பி
வஞ்சநர கில்விழுவீர் மாண்டு.

மலைமடந்தை தன்கழுத்தின் மங்கலநா ணேதோ
அலைகடைந்த நாளுதித்த வாலம்—கலைகடந்த
நக்கனும் பாத்திரத்தால் நாரணனா ருள்ளமுகத்
தக்கணத்துண் ணவிடினா வா.

(6) சதாசிவனனவர் சரபமாய்வந்து நரசிங்க மூர்த்தியைப் பொருதுவென்றா ரென்றதற்கு விடை.

புக்க கருடனையோர் புன்மசகம் வென்றதிறம்
ஒக்குங் கனக னுரங்கீண்ட—மிக்கதிறல்
ஆளரியைப் பொன்னனுக்கா யஞ்சிக்கிடந்தசிவன்
கொள்விளைத்தானென் னுங்குறி.

பொன்னனூரங் கீண்டதனுற் பொங்குசின மாறிற்றே
துன்னு சிவசரபஞ் சோரவுயிர்—அன்னதனைப்
பற்றி வகிர்ந்தபின்னர்ப் பாழி நரமடங்கல்
உற்ற சினந்தணிந்த தூங்கு.

(7) சுதரிசனுழ்வானுல் சிவன்தலை யிழந்தானென்று மேலு மோரெடுத்துக்காட்டு விடை.

இந்திரன்செய்வேள்விக்கிட்ரிமைக்கவெண்ணுமரன்
ஐந்தலையு மற்றுவிழ வாழியினுல்—முந்தரிந்த
அச்சுதனை மைந்தரொடு மம்பிகையாள் வேண்டிலும்
அச்சிவன்பெற் றுனுயிரை யன்று.

(8) காசியில் எழுந்தருளியிருக்கும் மஹேசுவரனுர் அந்தத்தலத்தில் மறிக்கின்றவர்களுங்கு முத்தியைக்கொடுக்கின்றுரென்றதற்கு விடை.

கேட்டுமறி யீர்கொல் கிளர்சடையோன் வண்காசி
நாட்டிறப்போர் தம்முயிரை நற்கதியிற்—கூட்டல்
தயரதகு மாரன் தனிப்பெயரன் ஞேர்க்கு
வயமுறப்போ தித்தன்றே வாய்ந்து.

(9) சிவனுரை மஹேசுர ரென்றதற்கு விடை.

செய்தவங்கள் செய்து சிவனு யினுனைநீர்
எய்த மகேச்சுர னென்றேத்தல்—வைதசிறு
புன்களளி தன்னைப் புவியின் மகாவிருக்கம்
என்கையொக்கு மொக்குமே யீங்கு.

(10) தவங்கள்செய்து சிவனுயினுனென்று நீர்கூறுதல் எவ்வாறென்றதற்கு விடை.

(11) ஸ்ரீகண்டத்தானன்றோ வேதமுதல்வன் என்றதற்கு விடை.

ஞான மறையை நவின்றுரைக்கும் போதெல்லாம்
ஆனமுறை யாலாதி யந்தத்தும்—ஊனமற
அந்தணர்க ளென்போ ரரியோ மெனுஞ்சொல்லைத்
தந்துரைத்தல் கேட்டிலிரோ தான்.

(12) சைவர்கள் ஆராதிக்குந் தெய்வம் யோனியும் இலிங்கமும் என்றுகூற அதுபொறுதவர்களாய்த் திருமாலை நிந்திபதே பொருளாகக்கொண்டு ஆலயங்களில் பிரதிஷ்டை செய்திருக்கும் சிவலிங்க மூர்த்தியை யோனிரூபமாய்த்தாங்கியிருப்பவர் திருமாலன்றோவென்று சொன்னதற்குவிடை.

பிருகுகோத மன்முன் பெருஞ்சினங்கொண் டின்பம்
பருகுமையீ சன்குறிகள் பாரில்—அருகிவிழ
இட்டசா பத்தினு லிற்றகுறி யன்றேநும்
இட்டதெய்வ மாயிருந்த லீங்கு.

(13) ஸ்ரீசர்வேசுவரனை வாய்மதங்கொண்டு பேசுமவர்கள் அடையும்பயன் இன்னதென்று குறிப்பித்துக் கூறும் மேலுமோர் விடை.

கையிருக்கக் காலிருக்கக் கண்ணிருக்க நக்கனுக்கு
மெய்யிருக்க வன்பர் விரும்பாதே—வைதுவிழும்
ஆண்குறியைப் பூசித் தழிவதெல்லா மாயனை
வீண்குறியாப் பேசும் வினை.

(14) அவ்வாராலை் சிவனையாராதித்துப்பூதி உத்திராக்ஷம் இலிங்கம் இவற்றைச் சில பிராமண ஜனங்கள் தரிக்கிறார்களே என்றதற்கு விடை.

வேதியர்க ளாய்ப்பிறந்தும் மெய்யிலிலிங் கம்பொறுத்துப்
பூதியரன் கண்மணியின் பூணணிந்த—பாதகரை
நீதிபர சன்றனிலத்தின் புறம்விடுக்க
ஓதிடுமே நூல்க ளொருங்கு.

(15) திருமாலுக்கு ஆராதித்த நிவேதனங்களை யார் கொண்டாலுந் தோஷமில்லை. சிவபெருமானுடைய நின்மாலியத்தைப் பிராமணர்களும் கொள்ளக்கூடாதென்பது அந் நின்மாலியப் பரிசுத்தத்தின் ஏற்றத்தைக் கண்டன்றோ வென்றதற்கு விடை.

சத்திரயா கந்தன்னிற் றக்கன் பிருகரற்கு
வைத்தகொடுஞ் சாபத்தான் மாமறையோர்—இத்தலத்தில்
சங்கரனின் மாலியமுந் தானுகந்த போனகமும்
அங்கி கரியா ரறிந்து

(16) நீர் இவ்வாறு சொல்லுவீரானால் உலகத்திலே சைவசமயத்தைப்பற்றிய ஆகமமுதலிய நூல்களை விரித்துத் திருவாய்மலர்ந்தருளினவர் பரமசிவக்கடவுளன்றோ? அவருடைய திருவாக்குப் பிரமாணமன்றோ? வென்பதற்கு விடை.

மோகனநூற் பல்சமய முன்னியற்றுந் தீயவினை
போகநறு நாவலின்கீழ்ப் போந்துமையாள்—பாகனன்னீர்
பம்புசீர ரங்கற் பணிந்துதவஞ் செய்ததன்றோ
சம்புகேசு ரப்பேர்த்தலம்.

(17) சிவபெருமானைக் குறித்து அநேகர்தவஞ்செய்து வரங்களை பெற்றனரென்றதற்கு விடை.

பொன்னிலங்கு மெய்யன் பொருவலிசேர் வாலியொடு
தென்னிலங்கைக் கோமான் றிறல்வாணன்-முன்னரனைத்
தாழ்ந்து பெறுவரத்தைச் சாற்றிடலும் வேண்டுமோ
வாழ்ந்துவிடிந் திட்டனரே வாய்ந்து.

(18) திருமாலே பரனென்னக் கங்கைக் கரையில் வேதவியாஸமுனிவர் பொய் சொன்னபடியால் கைதம்பித் ததென்றதற்கு விடை.

யாரு மறிய வெசுருவேல் தீரரணமெய்
ஆருமொழி யாளனென வாய்ந்துரைக்க-வோர்வின்றி
வேதவியா சன்பொய் விளம்பக் கரந்தம்பித்
தேகமுறு நின்றதென்ப தென்.

முனிவ ரெழுவர் முதுப்ரெக ரன்செம்
பணிமலரா னுள்ளிட்ட பல்லோர்-இனிதாய்த்
திருமால் பரனென்னச் செப்பினரன் ஞோர்க்கேன்
பெருநாத்தம் பிக்காத பெட்பு.

(19) கேசவனே பரனென்ற வேதவியாஸர்மேல் சினங்கொண்டெழுந்த நந்திகேசுவரர் வரலாறு கூறிய விடை

ஓதுமுனி மால்பரனென் றோதமாழ் கிச்சினந்து
போதுநந்தி மாமுகத்திற் பொன்னடியால்-வாதசேய்
முன்னுதைத்தானந்த முறைமையாற் கங்கையெருத்
தின்முகத்தன் ஞேன்பிறங்க லீங்கு.

* மாருதிசீர் பாதமுகம் வாய்க்கப் பெறுநந்தி
சீருதவு மால்பரனைச் சிந்தைசெய்யுங்-காரணத்தால்
பேர்கங்கை மாட்டைப் பெருமாள்மா டென்னவுல
கோருரைப்பர் சோரா துணர்ந்து.

---

* அநுமானுடைய திருவடி ஸ்பர்சத்தால் நந்திகேசுரனுக்கு ஞானமுண்டாகிச் சோழதேசஞ்சென்று அச்சுதனை நோக்கித் தவஞ்செய்து பேறுபெற்றகாரணத்தால் அந்தத் திவ்யதேசத்துக்குத் திருநந்திபுரவிண்ணகரமெனப்பெயர் வழங்கிவருகின்றது.

(20) திருமால் உலகத்தில் அனேக அவதாரங்கள் செய்தமையால் அவர்நம்மைப்போலப் பலபிறப்புடையவ ரன்றோ வென்றதற்குவிடை

பிறப்பிலியாய்த் தானிருந்து பேருலகின் பாயோன்
உறப்பிறக்கு மென்றுமறை யோத-மறுத்துநீர்
அச்சுதனைச் சாதமுடை யானென் றறிவிழந்த
பிச்சரிற்பி தற்றுவதென் பேச்சு.

(21) அவ்வதாரம் இதுகருதியென்னும் விடை.

ஆய வறத்தை யறவோரை யாக்கவும்வெந்
தீயர்தமைப் போக்கவுமே திண்புவியில்-மாயுகங்கள்
தோறுமுற்ப விப்பனெனத் தொல்கீதையிற்கண்ணன்
கூறுமொழி தேர்கிலிரோ கூர்ந்து.

(22) பிரமன் சிவன் முதலானோர் இறைவனாகிய திருமாலைப் போல அவதரிக்கநிமித்தமில்லை யென்னும்விடை.

உடையானுக் கன்றி யுடைப்பொருளைக் காக்கப்
படையார் தமக்குண்டோ பாரம்-அடைவாகச்
சீதரனார் காக்கத் திருவவதா ரஞ்செய்வர்
சேதனருக் கேனச் செயல்.

(23) சிவனுக்குப் பிறப்பில்லை யெனமயங்கிக்கூறிய தற்கு விடை.

விச்சுவவ ரன்சுகனை மேலோன் சமதங்கி
அச்சுவத்தா மன்னனுமா வவ்வுருவன்-மெச்சுபுகழ்
பொங்குதுரு வாசன் பொலிசை கிடவியனார்
சங்கரன்பி றப்பன்றோ தாம்.

(24) சிவனுடைய பிறப்புக்கள் இந்திரன்முதலானோர்செய்த பிறப்புக்களைப்போலன்றிச் சிறந்தனவல்ல வென்னும்விடை.


அங்கி யமன்வாயு வாகண் டலன்முதலோர்
இங்குதித்த தோற்றங்கள் யாவையுமே-பொங்கறிவின்
மிக்கவர்கண் மான விளம்பினரோ வில்லையஃ
தொக்கு மரன்பிறப்புக்கும்.

ஆதிசைவசமய நிஷ்டானுபவர்களாகிய வித்வான்கள் சொல்லிக்கொண்டு வந்தப்ரசனைகளுக்கு வடமொழியினுந் தென்மொழியினுந் தெய்வப்புலமையுள்ள வீரவைஷ்ணவ சிகாமணிகளாகிய ஐயங்கார் அருளிச்செய்த விடைகளை மறுத்துச் சொல்ல ஒன்றுந் தோன்றாமல் ஓமென்று ஒப்புக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடத்துக்குச் சென்றனர்.

---

☞ இதை (7-வது பக்கம்) 10-வது வினவின்கீழ் சேர்த்துக் கொள்ளவும்.

ஒருகத்தி லூருவினி லோருகத்திற் பூருவிலம்
போருகத்தன் பாற்பிறந்தபோழ்ததனில்—கார்நிறந்த
கண்டத்தான்ரோதனஞ்செய்காரணத்தால் ருத்ரனென்
றெண்டவ நூல்களுரைக் கும்.



## ஐயங்கார் அருளிச்செய்த தனிப்பாடல்கள்.

### தாழிசை.

செங்கண்மால்கழன்மஞ்சனம்விழுந்தொட்டி சங்கரன்றலைகளே
சீர்கொள்கண்ணனல்லடிநின்மாலியக்குப்பைசம்புவின்றலைகளே
எங்கண்மாயவன் பாயறாக்கிய தூக்குமாபதி செவிகளே
ஏந்தெழிற்புருடோத்தமன்றுதியெழுதுமேடாணுக்களே
பொங்குசீதரனெச்சிலார்படிக்கம் புராரியின்கண்டமே
புகலிராமனதடிகொள்பாதுகையகலுமுக்கணன்காமதே
திங்கள் சூழ்சித்ரகூடமேவியவெங்கள் கோவிந்தராசற்குத்
தினமுமேகூத்தாடியானவன் திருச்சிற்றம்பலவாணனே.

### கட்டளைக்கலித்துறை.

கானேந்துதாமரைவாவியுளானைகராவினயர்ந்
தூனேந்திமூலமென் றோதியநாட்சென்றுதவுகையால்
தேனேந்து சோலைபரங்கனல்லாற்றெய்வமில்லையென்றே
யானேந்துகையன்மழுவேந்திஞனிந்தமாநிலத்தே.
மத்தக்கரியைக்கராப்பற்றிநின்றதொர்வாவியுள்ளே
சித்தந்தெளிந்து முறையிடும்போது செழுந்துளவக்
கொத்துக்கிளர்முடிக்கோவிந்தவென்றதுகூப்பிட்டதோ
செத்துக்கிடந்தனவோகெடுவீருங்கள் தெய்வங்களே.

### திருத்தேர்விஷயமாயருளிச்செய்த நேரிசைவெண்பா.

ஒன்று மறியாத வூமைகா டென்னரங்கர்
இன்று திருத்தேரி லேறிஞர்-நின்று
வடம்பிடிக்க வாருங்கோள் வைகுந்த நாட்டில்
இடம்பிடிக்க வேண்டுமென்றக் கால்.

அழகியமணவாளதாஸர் திருவடிகளேசரணம்.

## திருமங்கையாழ்வார் ப்ரளயாபத்தில் பாதுகாத்த பெருமானையே ஆச்ரயியுங்கோள் என்று உலகத்தாருக்கு உபதேசித்தல்.

மைந்நின்ற கருங்கடல்வா யுலகின்றி
வானவரும் யாமுமெல்லாம்
நெய்ந்நின்ற சக்கரத்தன் திருவயிற்றில்
நெடுங்காலம் கிடந்ததுஓரீர்
எந்நன்றி செய்தாரா வேதிலோர்
தெய்வத்தை யேத்துகின்றீர்
செய்ந்நன்றி குன்றேல்மின் தொண்டர்காள்
அண்டனையே யேத்தீர்களே. (௧)

நில்லாத பெருவெள்ளம் நெடுவிசும்பின்
மீதோடிநிமிர்ந்தகாலம்
மல்லாண்ட தடக்கையால் பகிரண்ட
மகப்படுத்தகாலத்தன்று
எல்லாரு மறியோரா வெம்பெருமான்
உண்டுமிழ்ந்த எச்சில்தேவர்
அல்லாதார் தாமுளரே யவனருளே
யுலகாவ தறியீர்களே. (௨)

நெற்றிமேல்கண்ணனும் நிறைமொழிவாய்
நான்முகனும் நீண்டநால்வாய்
ஒற்றைக்கை வெண்பகட்டி லொருவனையும்
உள்ளிட்ட வமரரோடும்
வெற்றிப்போர்க் கடலரையன் விழுங்காமல்
தான்விழுங்கி யுய்யக்கொண்ட
கொற்றப்போராழியான் குணம்பரவாச்
சிறுதொண்டர் கொடியவாறே. (௩)

பனிப்பரவைத்திரை ததும்பப் பாரெல்லாம்
நெடுங்கடலேயான காலம்
இனிக்களைக ணிவர்க்கில்லையென்றுலகம்
ஏழினையுமூழில்வாங்கி
முனித்தலைவன் முழங்கொளிசேர் திருவயிற்றில்
வைத்தும்மை யுய்யக்கொண்ட
கனிக்களவத் திருவுருவத் தொருவனையே
கழல்தொழுமா சல்லீர்களே. (௪)

பாராரும்காணுமே பரவைமா
நெடுங்கடலே யானகாலம்
ஆரானுமவனுடைய திருவயிற்றில்
நெடுங்காலம் கிடந்ததுள்ளத்து
ஓராதவுணர்விலீர் உணருதிரேல்
உலகளந்தவும்பர்கோமான்
பேராளன் பேரான பேர்களாயிரங்
களுமே பேசீர்களே, (௫)

பேயிருக்கு நெடுவெள்ளம் பெருவிசும்பின்
மீதோடிப் பெருகுகாலம்
தாயிருக்கு வண்ணமே யும்மைத்தன்
வயற்றிருத்தி யுய்யக்கொண்டான்
போயிருக்க மற்றிங்கோர் புதுத்தெய்வம்
கொண்டாடும் தொண்டீர்பெற்ற
தாயிருக்க மணை வெந்நீராட்டுதிரோ
மாட்டாத தகவற்றீரே. (௬)

மண்ணாடும் விண்ணாடும் வானவரும்
தானவரும் மற்றுமெல்லாம்
உண்ணாதபெருவெள்ள முண்ணாமல்
தான்விழுங்கி யுய்யக்கொண்ட
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன்
கழல் சூடி யவனையுள்ளத்து

எண்ணுதமானிடத்தை யெண்ணுத
போதெல்லா மினியவாறே. (எ)

மறங்கிளர்ந்த கருங்கடல்நீ ருரந்துரந்து
பரந்தேறி யண்டத்தப்பால்
புறங்கிளர்ந்தகாலத்துப் பொன்னுலகம்
ஏழினையு மூழில்வாங்கி
அறங்கிளர்ந்த திருவயிற்றினகம்படியில்
வைத்தும்மை யுய்யக்கொண்ட
நிறம்கிளர்ந்தகருஞ்சோதி நெடுந்தகையை
நினையாதார் நீசர்தாமே. (அ)

அண்டத்தின்முகடழுந்த வலைமுந்நீர்த்
திரைததும்ப ஆ! ஆ!வென்று
தொண்டர்க்கு மமரர்க்கும் முனிவர்க்கும்
தானருளி யுலகமேழும்
உண்டொத்த திருவயிற்றினகம்படியில்
வைத்தும்மை யுய்யக்கொண்ட
கொண்டற்கை மணிவண்ணன் தண்
குடந்தைநகர் பாடி யாடீர்களே. (கூ)

தேவரையு மசுரரையும் திசைகளையும்
கடல்களையும் மற்றும்முற்றும்
யாவரையுமொழியாமே யெம்பெருமான்
உண்டுமிழ்ந்த தறிந்துசொன்ன
காவளரும்பொழில் மங்கைக் கலிகன்றி
யொலிமாலை கற்றுவல்லார்
பூவளரும்திருமகளா லருள்பெற்றுப்
பொன்னுலகில் பொலிவர்தாமே. (ω)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.